## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு | : OS.24/2024 | கிராமம் | : பிலிச்சுகுழி |
| சாட்சி | : பி.வா.சா–1 | வட்டம் | : உடையார்பாளையம் |
| பெயர் | : ராமு | தொழில் | : விவசாயம் |
| த/பெ | : பொன்னுசாமி | வயது | : 82 |

2026–ம் ஆண்டு செப்டம்பர் 08 –ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

1. கடந்த 16.06.1995 –ம் தேதியிட்ட சர்வே எண். 241/15 –க்கு நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் 1–ம் பிரதிவாதி பெயரில் கொடுத்த படிவம் அசல் பி.வா.சா.ஆ–1.
2. கடந்த 22.08.1995 –ம் தேதி 1–ம் பிரதிவாதி பெயரில் தனி வட்டாட்சியர் கொடுத்த பட்டா அசல் (பட்டா எண். 378) பி.வா.சா.ஆ–2.

3. சொத்து வரி ரசீது அசல் (எண்ணிக்கை –4) பி.வா.சா.ஆ–3.

4. வீட்டு வரி ரசீது அசல் (எண்ணிக்கை –12) பி.வா.சா.ஆ–4.

5. குடிநீர் வரி ரசீது அசல் (எண்ணிக்கை –3) பி.வா.சா.ஆ–5.

6. மின் கட்டண ரசீது அசல் (எண்ணிக்கை –5) பி.வா.சா.ஆ–6.

7. கடந்த 26.12.2017 –ம் தேதி Equitas Small finance Bank limited –ல் சர்வே எண். 241/15 யை அடமானம் வைத்ததற்கான அடமான பத்திரம்அசல் பி.வா.சா.ஆ.7.

8. கடந்த 24.11.2023 –ம் தேதி Equitas Small finance Bank limited –ல் அடமானம் வைத்ததை மீட்டதற்கான கடன் பைசல் ரசீது அசல் பி.வா.சா.ஆ.8.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / R.கார்த்திகேயன்
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.